[2002 ஏப்ரல் 10

வழங்கியுள்ளார்கள். அதேபோல ஆற்காடு தொகுதியிலே விவசாயத் தொழில் நிறைந்த மலை சார்ந்த பகுதிகளான வெங்கடாபுரம், குப்பம், புங்கனூர், வெல்லக்குளம், வண்டிக்கல் போன்ற கிராமங்கள் உள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பிள்ளையின் தொகுதியில் விவசாயக் கல்லூரி அமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 10 விவசாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல வேலூர் மாவட்டம், கலவையில் ஆதிபராசக்தி அறக்கட்டளையின்கீழ் விவசாயக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. ஆகவே அதே மாவட்டத்தில் புதிய கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், கேள்வி இல்லையா? வியப்பாக இருக்கிறது.

வினா எண் 119, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

119—

ஊட்டச்சத்து

***7177—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தில் சத்துருண்டையில் பிண்ணாக்கு சேர்ப்பதற்குப் பதிலாக ஊட்டச்சத்துள்ள ஜவ்வரிசியைச் சேர்த்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜவ்வரிசியை ஊட்டச்சத்துணவில் சேர்க்கும் திட்டம் அரசின் பரீசீலனையில் இல்லை.

2002 ஏப்ரல் 10]

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு, கோவை, தென்னாற்காடு மாவட்ட மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகள் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்களின் நலனைக் காத்திடும் வகையில் சேகோசர்வ் கூட்டுறவு நிறுவனத்திற்குக் கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை மலர்ப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே 80 சதவிகிதம் ஜவ்வரிசி தமிழகத்தில்தான் உற்பத்தியாகிறது. இந்தச் சத்துள்ள ஜவ்வரிசியை வடமாநிலத்தில் உணவாகப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல தமிழகத்தில் உணவாகப் பயன்படுத்த குறிப்பாக ஏழைக் குழந்தைகள் நலமுடனும், வளமுடனும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் வாழ சத்துள்ள ஜவ்வரிசியை சத்துணவுத் திட்டத்தில் சேர்த்துக் கொடுக்க வரும் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகின்ற ஊட்டச் சத்துணவில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சமூகநலத் துறையின் ஆய்வின்போது குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற உணவில் கால்நடைகளுக்கு வழங்கப்படுகின்ற கடலைப் பிண்ணாக்கு சேர்க்கக் கூடாது என்று அறிவுறுத்தி, ஏற்கெனவே கடலைப் பிண்ணாக்கு ஊட்டச் சத்துணவிலே நீக்கப்பட்டது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக ஜவ்வரிசியைச் சேர்த்தால், ஜவ்வரிசியில் 100 கிராமிற்கு 2 சதவீதம் புரதச் சத்து மட்டுமே உள்ளது. ஆனால் கோதுமையில் 11.8 சதவீதமும், ராகியில் 7.3 சதவீதமும், வறுக்கப்பட்ட கடலை மாவில் 22.5 சதவீதமும் புரதச் சத்து உள்ளது. எனவே, புரதச் சத்து குறைவாகவுள்ள ஜவ்வரிசியை ஊட்டச் சத்துணவில் சேர்க்கின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திலே, ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த முட்டையை நிறுத்திவிட்டு, இப்போது அதற்குப் பதிலாக உருளைக்கிழங்கு, அதேபோல, சில பயறு வகைகளைச் சேர்த்துக் கொடுப்பதற்கு நீங்கள் திட்டமிட்டிருக்கிறீர்கள். ஆனால், முட்டைகள் நிறைய இப்போது தேங்கிக் கிடக்கின்றன. தமிழ்நாட்டிலே W.T.O. ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்ட காரணத்தினாலே, நாமக்கல் போன்ற பகுதிகளில் கிடைக்கக்கூடிய முட்டைகள் தேங்கிக் கிடக்கின்ற காரணம் ஒன்று. இரண்டாவது, நிறைய பால் உற்பத்தி நம்முடைய தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் உருளைக்கிழங்கை வேக வைத்து அதனைப் பிரித்துக் கொடுப்பதிலே சத்துணவு அமைப்பாளர்கள் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முட்டை நிறைய கிடைக்கின்ற காரணத்தாலே, மீண்டும், அதையே கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? பால் நிறைய இருக்கின்ற காரணத்தாலே பாலைக்கூட, சத்தைப் பெறக்கூடிய வகையில் இந்தச் சத்துணவுத் திட்டத்திலே விநியோகம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஊட்டச் சத்து சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் இந்தக் கேள்விக்கு பதில் தெரிவிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டிருக்கக் கூடாது. காரணம், இதே அவையிலே அவர் பேசிய பேச்சை நான் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறேன். என்னுடைய மானியக் கோரிக்கை வருகிறபோது நான் இதற்குப் பதில் சொல்லலாம் என்று இருந்தேன். இருந்தாலும்கூட, அவர் இந்தத் தொடர்புடைய கேள்வியை கேட்ட காரணத்தினால் அவர் இந்த அவையிலே பேசிய பேச்சு, முன்னாள் முதலமைச்சர், இந்த மன்றத்தின் இப்போதுள்ள உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்களை உட்கார வைத்துக்கொண்டு அவர் பேசிய பேச்சில் சொல்லியிருக்கிறார்: 'தவறுதலான முட்டை கொடுத்த காரணத்தால் தமிழ்நாட்டுக் கோழிகள்கூட அரை முட்டை இட்டுக்கொண்டிருக்கின்றன' என்று அவர் சொன்னது பதிவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் புத்தகத்திலேயிருந்து எடுத்து வைத்திருக்கிறேன். ஆகவே, முட்டை வழங்கக்கூடிய கருத்துரு இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. (குறுக்கீடு).

2002 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. முட்டைக்கு முட்டை போட்டாகிவிட்டது. (சிரிப்பு). விடுங்கள்.

வினா எண் *120*, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

120—

சலுகைகள்

***4176—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட மக்களுக்கு அரசால் வழங்கப்படும் பல்வேறு வகையான சலுகைகள் சென்றடைகின்றனவா என்ற உண்மைகளை நேரடியாகக் கண்டறிய மாவட்ட வாரியாகக் குழுக்களை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிட இன மக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சலுகைகள் அம்மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை அரசால் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆதிதிராவிட நலக் குழுக்கள் கண்காணித்து வருகின்றன. தாட்கோ நிறுவனம் மூலம் ஆதிதிராவிட இன மக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு வகைக் கடன் உதவிகள் மாவட்ட வாரியாக அரசு அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மூலம் பரிசீலித்து வழங்கப்படுகின்றன. இந்நிலையில் இக்குழுக்கள் தவிர, மேலும் குழுக்களை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு அரசால் வழங்கப்படுகிற பல்வேறு சலுகைகள் சென்றடைகின்றனவா என்பதை அறிவதற்கு குழுக்களை அரசு அமைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழுக்களிலே சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மாவட்டத்திலே இருக்கின்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஒரு சிலரையும் இணைத்து,